உ

சிவமயம்



சரவணை கிழக்கு வேலணையைப் பிறப்பிடமாகவும்
சுண்டுக்குளி, கொழும்பு, இலண்டன் ஆகிய இடங்களை
வதிவிடமாகவும் கொண்ட

அமரர் திரு. நாகேந்திரர் தவராசா அவர்கள்
இறைபதம் எய்தியமை குறித்த

# தவதீபம்

24.03.2017

In Loving Memory of

# Late Mr Nagendrar Thavarajah

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

இப்பூவுலகில் எம் நலத்திற்கும்.
வளர்ச்சிக்கும் மெழுகுவர்த்தியாகி உருகி ஒளியூட்டி.
ஆலமரமாக எம் குடும்பத்திற்கு நிழல் பரப்பி
எம்மையெல்லாம் அன்போடும் பண்போடும் பாசத்தோடும்
வளர்த்து நல்வழிகாட்டி.
நற்கல்வியூட்டி. உறுதுணையாக இருந்து
சொந்த பந்தங்கள் அனைவருக்கும் பக்கபலமாய் இருந்து
சீரும் சிறப்புடன் வாழவைத்து.
மனிதருள் மாணிக்கமாய்.
குடும்பத்தின் தலைவராக. தந்தையாக மனம் பல
மாண்புடன் பரப்பி இனமெல்லாம் இன்புடன் வாழ
ஏற்ற நற்பணிகள் காத்து வையத்துள்
என்றும் நீங்கா ஒளியாகத் திகழும்
அன்புத் தெய்வத்தின் பாதக் கமலங்களிற்கு
இவ்வினிய மலரினைக்
காணிக்கையாக்குகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி

**என்றும் நீங்கா நினைவுகளுடன்**
**குடும்பத்தினர்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்

# அமரர் திரு **நாகேந்திரர் தவராசா** அவர்கள்



**அன்னை மடியில்**

**25 * 07 * 1944**

**ஈசன் அடியில்**

**22 * 02 * 2017**

## திதி வெண்பா

துர்முகி வருடத்து மாசிநற் திங்களொளி
அபர பட்சத்து ஏகாதசி திதிதன்னில் - அண்ணல்
தவராசா குலதெய்வம் வைரவர் தம்
திருவடிக்கீழ் இன்புற்று இருந்தபோது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



## விநாயகர் காப்பு

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றோமே (திருமூலர்)

## தேவாரம்

நிரைகழல் அரவம் சிலம்பொலி அலம்பும்
நிமலர் நீறணி திருமேனி
வரைகெழு மகள் ஓர் பாகமாய்ப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் கார்அகிற் பிளவும்
அளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகடல் ஓதம் நித்திலம் கொழிக்கும்
கோணமா மலை யமர்ந்தாரே

## திருவாசகம்

பால்நினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச்சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே

## திருவிசைப்பா

ஏகநாயகனை இயமையவர்க் கரசை
என்உயிர்க் கமுதினை யெதிரில்
போகநாயகனைப் புயல்வணற்கு அருளிப்
பொன்னெடுஞ் சிவிகையா லூர்ந்த
மேகநாயகனை மிகு திருவீழி
மிழலை விண்ணிழி செழுங்கோயில்
யோகநாயகனை அன்றி மற்றொன்று
உண்டென உணர்கிலேன் யானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

ஆரார் வந்தார் அமரர் குழாத்தில்
அணியுடை யாதிரை நாள்
நாராயணனொடு நான்முக னங்கி
யிரவியும் இந்திரனும்
தேரார் வீதியிற் றேவர் குழாங்கள்
திசையனைத்து நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும் மாடியும்
பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும்போது உன்னடியின் கீழ் இருக்க என்றார்

## திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முக்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முக்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தம தானசற் குணர்நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசற் திநிபாதா
வெற்றி வேலாயுதப் பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க
மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க
குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க
நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய சிவபுராணம்

திருச்சிற்றம்பலம்

தொல்லையிரும் பிறவிசூழும் தளை நீக்கி
அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே – எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னும் தேன்.

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகம மாகிநின்று அண்ணிப்பான் தாள்வாழ்க

ஏகன் அனேகன் இறைவன் அடிவாழ்க
வேகம் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க

கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன்கழல் வெல்க
ஈசனடி போற்றி எந்தைஅடி போற்றி
தேசனடி போற்றி சிவன்சேவடி போற்றி

நேயத்தே நின்ற நிமலனடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னனடி போற்றி
சீரார் பெருந்துறைநம் தேவனடி போற்றி
ஆராத இன்பம் அருளும்மலை போற்றி

சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்

பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற

மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம் விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி

மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்

ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் யென்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பில்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனம்கழிய நின்ற மறையோனே

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாய் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோர் ஐந்துடையார் விண்ணோர்கள் ஏத்த

மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி

மலஞ்சோரு மொன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் உருகும்

நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீழ்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய் சிந்த அடியேர்க்கு
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேசஅருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே

இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமா யல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே

ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெஞ் ஞானத்தால் கொண்டுணர்வார் தம்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே

காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றினி வெள்ளமே அத்தாமிக்காய் நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்

தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேனெம் ஐயா அரனேயோ என்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிரவில் நட்டம் பயின்றாடும் நாதனே

தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக் கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்

செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக் கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கைப் பாதையில்...

" வையத்துள் வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும் "

ஒரு மனிதன் வாழ்ந்த காலத்தை விட அவன் வாழ்ந்த காலத்தில் எப்படி மக்கள் மனதில் இடம் பிடித்தான் என்பதும்,வாழ்ந்த போது அவன் பதித்த சுவடுகளுமே முக்கியமானவை. அந்தவகையில் தன் வாழ்நாளில் குழந்தை முதல் பெரியோர் வரை எல்லோர் மனங்களையும் தன்னிகரில்லா அன்பால்க் கவர்ந்ததோடு மட்டுமல்லாமல்,தன் அயரா முயற்சியால் உயர்ந்தவர்தான் அமரர் நாகேந்திர் தவராசா அவர்கள்.

இவர் யாழ் தீவகற்பத்தின் வடபால் இலங்கும் மருதமும், நெய்தலும் ஒருங்கே அமையப் பெற்ற சரவணன் குடி கொண்ட மண் வளமும் நீர் வளமும் கொண்ட சரவணையூரில் நாகேந்திரர் சின்னம்மா தம்பதிகளுக்கு இளைய மகனாக வந்துதித்தார்.

உடன் பிறந்தவர்கள் எண்மர் முறையே வேலாயுதபிள்ளை, மனோன்மணி, அருமைநாயகம், லட்சமி, தியாகராசா மற்றும் நாகநாதபிள்ளை, தாட்சாயினி, அம்பிகாபதி, பாக்கியலட்சுமி. இவர்களில் அருமைநாயகம் அவர்கள் அன்னார் மறைந்து ஒருமாதம் முடிவதற்குள்ளாகவே 19-03-17 அன்று திடீரென மரணமாகிய செய்தி எல்லோர் மனங்களையும் சோகத்தில் ஆழ்த்தியது. கடந்த வருடம் காலமாகிய வேலாயுதபிள்ளை அவர்களொடு லட்சுமி, தியாகராசா, தாட்சாயினி ஆகியயோரும் இறையடி சேர்ந்தவர்களாவர்.

மனோன்மணி, நாகநாதபிள்ளை, அம்பிகாபதி, பாக்கியலட்சுமி ஆகிய சகோதர சகோதரிகள் தாயகத்தில் சீரோடும் சிறப்போடும் வாழ்ந்து வருகிறார்கள். இவர் தனது ஆரம்பக் கல்வியை சரவணை நாககேஸ்வரி வித்தியா சாலையிலும்.உயர் கல்வியை வேலணை மத்திய மகாவித்தியாலயத்திலும் தொடர்ந்தார் ஆனாலும் குடும்ப சூழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலை காரணமாக அவரால் கல்வியைத் தொடர முடிய வில்லை. கதிர்காமம் சென்று வருவதாக வீட்டில் சொல்லிச் சென்றவர் கதிர்காமம் சென்று வழிபாடு செய்து விட்டு அண்ணர் நாகநாத பிள்ளை எல்ப்பிற்றியில் நாதன்ஸ்றோர் என்ற பெயரில் நடத்திய பலசரக்குக் கடையில் போய் உதவியாய் நிற்கிறேன். என்று கூறி அங்கே தங்கிவிட்டார்.

அறுபதுகளில் தொடங்கிய அவரது பயணம் தொடர்ந்தது. அண்ணர் நாகநாத பிள்ளை திருமணத்தைத் தொடர்ந்து தம்பி தவராசாவிடம் கடைப் பொறுப்பபை ஒப்படைத்தார். ஏனைய சகோதரர்களும் சிங்களவர் மத்தியில் சரவணைப் புகையிலைக்கிருந்த மதிப்பினைக் கருத்தில்க் கொண்டு வியாபார நிமித்தம் சென்று வந்தனர்.

அகமும் முகமும் மலர ஊர்ப்பற்றோடு வரவேற்று உபசரிக்கும் இவரது விருந்தோம்பும் பண்பால் உறவினர் மட்டுமல்லாது, ஊரவர்களும் கதிர்காமம் சென்றால் இவரிடமும் சென்று வரத்தவறுவதில்லை. இவரது தாராள மனதை தமக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டவர்களும் இல்லாமலில்லை.

பேருந்துத் தரிப்பிடத்துக்கு முன்னால் அமைவாக கடை இருந்தமையால் சனக் கூட்டம் எப்பொழுதும் இருக்கும். சிங்களம் சரளமாகப் பேசத் தெரிந்த இவர் தேவைக்கேற்ப ஆங்கிலமும் தெரிந்து வைத்திருந்தார். உறவினர், நண்பர்கள், ஊரவர் மட்டுமன்றி சிங்களவரும் இவர் மீது மரியாதையும் மதிப்பும் வைத்திருந்தார்கள். இருப்பினும் துரதிஸ்டவசமாக எண்பத்தி மூன்று ஆடிக் கலவரத்தில் பெரிதும் பாதிக்கப் பட்டார். உடற்காயங்களோடும், மனக்காயங்களோடும் தன் வளம் இழந்து மக்களோடு மக்களாக பிறந்த மண் நாடி வந்தார்.

அந்தக் காயங்களை ஆற்றும் மறக்கும் நிகழ்வாக வாழ்வில் ஓர் திருப்பம் ஏற்பட்டது. அதுதான் அவருடைய மண வாழ்வு! யாழ் சுண்டுக்குளியைச் சேர்ந்த! பண்பினில் உயர்ந்த! திரு கந்தையா பொன்னம்மா தம்பதிகளின் இளைய புதல்வி இராசேஸ்வரி (குஞ்சு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களை நல்லறமாம் இல்லறத்தின் துணையாக்கினார். அவர் வாழ்வில் புத்துணர்வும் புது எழுச்சியும் உருவானது. துணைவியின் தூய அன்பினால் கவரப்பட்ட இவர் துணைவியாரை அழைக்கும் விதம் மிகவும் அலாதியானது நிமிடத்துக்கு நிமிடம் குஞ்சு! குஞ்சு! என அழைத்துக் கொண்டே இருப்பார். இதனால்ப் போலும் இவரை குஞ்சங்கிள் என்றே எல்லோரும் அழைத்தனர்.

முயற்சி திரு வினையாக்கும். என்பதற்கேற்ப தனது வர்த்தகத்தை கிளிநொச்சி மற்றும் இலங்கைத் தலை நகர்ப்பகுதியிலும் மேற்கொண்டு தன் வளம் பெருக்கினார். கொட்டேனாவில் சிறிது காலம் தன் அன்புத் துணைவியாருடன் வாழ்ந்து வந்த இவர் நாட்டுச் சூழ்நிலை காரணமாக தொண்ணூறுகளில் கொலண்டில் வதியும் மைத்துன மைத்துனியின் உதவியுடன் அந்நாட்டுக்கு சென்று சில வருடங்கள் தங்கிய போதும் அங்கு குடியுரிமை மறுக்கப்பட தன் உறவுகள் செறிந்து வாழும் லண்டன் மாநகருக்குப் புலம் பெயர்ந்தார்.

அங்கு தன் அயரா முயற்சியால் வதிவிட உரிமையைப் பெற்றுக் கொண்டதோடு தன் குடும்பத்திற்காக மட்டு மன்றி தான் சார்ந்த உறவுகளுக்காகவும் உழைத்து மகிழ்வுகண்டார். தனது மாமியாரை அம்மா என அழைக்கும் பண்புடையாளராக திகழ்ந்த இவர் மாமியாராலும் பெரிதும் விரும்பப்படும் அன்பு மருமகனானார்.

மனைவியாருடன் தாயகம் சென்று வந்தது மட்டுமல்லாமல் கனடா, பிரான்ஸ், சுவிஸ் எனப் பல நாடுகளுக்கும் சென்று உறவுகளைச் சந்தித்து அளவளாவுவதோடு ஆலோசனைகளையும் வழங்கி அகமிக மகிழ்ந்தார். இவ்வாறன இவருடைய அரவணைப்பால் எல்லோராலும் விரும்பப்படும் ஒருவராக திகழ்ந்தார்.

இத்தகைய பல சிறப்புகளை தன்னகத்தே கொண்டவர் வாழ்வில் விதி விளையாடியது தன் அண்ணன் மகன் லண்டணில் அகால மரணமடைந்த செய்தி அவரை மிகவும் வாட்டியது. அது மட்டுமல்லாமல் சற்றுக் காலம் செல்ல நோய்வாய்ப் பட்டார். நோய்வாய்ப் பட்டிருந்த இறுதிக் காலத்தில் சகோதர, சகோதரிகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் உறவுகளை சந்திக்க முடியவில்லை என்ற ஏக்கமும், அண்ணர் வேலாயுத பிள்ளையவர்களுடைய இறுதி நிகழ்விலும், அண்ணி மீராவினுடைய இறுதி நிகழ்விலும் பங்குகொள்ள முடியவில்லையே என்ற கவலையும் அவரை மிகவும் வாட்டியது.

நோயில் இருந்து மீளுவார்! குணமாகுவார், அவர் விரும்பியவாறு மாமியாரின் நூறாவது பிறந்தநாள் விழாவில் பங்குகொள்வார் என்று துணைவியொடு யாவரும் எண்ணியிருந்த வேளை எல்லோரையும் ஏமாற்றி 22-02-2017 அன்று இளைப்பாறிக் கொண்டார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறை தாழ் வேண்டி நிற்போம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்னவரே என்னுயிரே.......

கைபிடித்த நாள் முதலாய்
கண்ணெனவே காத்துவந்த
என்னவரே என்னுயிரே!
என்னைத் தவிக்கவிட்டு
இறையடியை நாடியதேன் - நின்
நினைவுகள் என்மனதை
நித்தம் வந்து வாட்டுதையா!
குஞ்சு! குஞ்சு! என்று-தினம்
கூவி அழைத்த குரலின்று
கனவிலும், நனவிலும்
நின்று எதிரொலிக்க
நித்தம் நினைவிழந்து வாடுகின்றேன்.

தாயாய், தந்தையாய், சேயாய்
தக்கதோர் துணையாய் - என்றும்
எனைக் காத்து நின்றவரே - இன்று
என் தவிப்பை யார் உணர்வார்
வீடு மாற வேண்டுமென்று
பெருவிருப்புக் கொண்டீர்கள்
வீடு வந்து சேர்ந்ததையா.
விதிவசத்தால் விழிமூடி வெத்துடலாய்
போனபின்னே வீடு வந்து போவதற்கா – நாம்
வீடெடுத்தோம்
துயரமது நெஞ்சமதை வாட்டுதையா
நினைப்பொழிய மறுக்குதையா.
என்னவராய், என்னுயிராய் - வாழ்ந்த
உங்கள் கலையாத நினைவுகள் தனைச் சுமந்து
நீங்கள் எனக்கு காட்டிய பாதைதனில்
தடம்பதித்து காலமெல்லாம்
வாழ்ந்திடுவேன்.

அன்பு மனைவி
**இராஜேஸ்வரி (குஞ்சு)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாங்குமோ என்நெஞ்சம்

மானிட உருவில் வாழ்ந்த தெய்வமே
மருமகனைப் போலல்லாது மகனைப்போலல்லவோ
எம் வாழ்வில் வந்தீர்கள்
அன்புள்ளம் கொண்டவரே
உங்கள் ஆவிபிரிந்த சேதி என்னை
கதிகலங்க வைத்ததுவே
கள்ளமில்லா உம்உருவைக் காண்பதெப்போ
கனிவான வார்த்தைகளைக் கேட்பதெப்போ
நீங்காத நினைவுகளுடன் என்றும் என்மனதில்
பூஜிக்கும் தெய்வம் அன்றோ நீங்கள்
ஓம் சாந்தி சாந்தி சாந்தி

*திருமதி பொன்னம்மா கந்தையா*
*(மாமி)*

## பரிதவித்து நாமிருக்க ஆண்டவன் அடியினை அலங்கரிக்கச் சென்றாயோ நீ?

எங்கள் அருமைத் தம்பியே, அண்ணாவே நீ
எங்களிடம் வருவாய்
பழைய நினைவுகளைப் பகிர்ந்து அகமகிழ்வோம் என
எண்ணியிருக்க எங்களை எல்லாம் தவிக்க
விட்டு எங்கு சென்றாய்? உன் அன்பு, இரக்கம்
எல்லோரிடமும் பழகும் பாங்கு, எதையும் அமைதியாக
கையாளும் திறன் என்று எதையுமே எங்களால்
மறக்க முடியவில்லை.தொலைபேசி மூலம்
அடிக்கடி தொடர்ப கொண்டு எங்கள் நலம்
விசாரிப்பாய் எங்கள் தேவை அறிந்து உதவிக்கரம்
நீட்டினாய். சென்ற முறை சிறீலங்கா வந்திருந்த
நாட்களை நினைவு கூருகின்றோம்.
அந்த இனிய நாட்கள் மீண்டும் வருமா?
உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**சகோதர, சகோதரிகள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நினைந்துருகல்

"அன்பிலார் எல்லாம் தமக்குரியர்
அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு"
என்றுமே தன்னலம் நோக்காது எங்கள் தேவை உணர்ந்து எங்களுக்கு உறுதுணையாக இருந்தீர்கள். வாழும் வழியை நீங்கள் காட்ட நாங்கள் தொடர்ந்து வந்தோம். இன்று செய்வதறியாது திகைத்து நிற்கின்றோம்.

ஈகைக்குணம், இன்முகத்தோடு பழகும் பண்பு, புன்சிரிப்பு இவற்றை தன்னகத்தே கொண்டு எங்களுடன் இணைந்து நின்றீர்கள்.

"நெருநல் உளன் ஒருவன் இன்றில்லை எனும்
பெருமை உடைத்து இவ்வுலகு"
என்ற வள்ளுவப் பெருமான் எடுத்துக்கூறிய கருத்தை ஏற்று நாம் அமைதி அடைகின்றோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இருகரம் கூப்பி இறைவனை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

**மைத்துனர், மைத்துனிகள்.**

**கொக்கைப் பார்த்து பொறுமையைக் கற்றுக் கொள்**
**எறும்பைப் பார்த்து சுறுசுறுப்பைக் கற்றுக் கொள்**
**தேனீயைப் பார்த்து உழைப்பைக் கற்றுக் கொள்**
**காகத்தைப் பார்த்து பகிர்ந்துண்ணக் கற்றுக் கொள்**
**நாயைப் பார்த்து நன்றியைப் கற்றக் கொள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புன்னகை மாறாத எங்கள் மாமா

அன்பின் உருவமாய், பண்பின் சிகரமாய், பாசத்தின் பொக்கிஷமாய் விளங்கிய எங்கள் மாமாவே எங்களை எல்லாம் தவிக்கவிட்டு எங்கு சென்றீர்கள். நெஞ்சினில் வஞ்சமில்லை, உள்ளத்தில் கள்ளமில்லை, உதட்டினில் பொய்யில்லை, எங்களை அரவணைப்பதில் ஒரு குறையுமில்லை. எங்கள் மாமா இருக்கின்றார் என்ற துணிவுடன் நாங்கள் வாழ்ந்து வந்தோம். ஒரு நிமிடம் எங்களைக் காணாவிட்டால் தொலைபேசி மூலம் எங்களைத் தேடுவீர்களே மாமா. இனிமேல் யார்?

**உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்**
**மருமக்கள்**

## பேரக்குழந்தைகளின் தேடல்

அம்மப்பா, அப்பப்பா, தாத்தா
என்று நாம் அழைக்கவில்லை
'Uncle' என்றே அழைத்தோம்
எங்கள் குரல் இனிமையை கேட்டீர்கள்
உங்கள் குரலைக் காணோமே?
எப்போ வருவீர்கள் எனக் கேட்பீர்கள்
நாங்கள் வந்து விட்டோம்
நீங்கள் எங்கே 'Uncle'
அறிவுரைகள் ஆயிரம் சொன்னீர்கள்
பழங்கால கதைகள் கூட நாம் கேட்டோம்
யார் உள்ளார் நமக்கு
தேடுகின்றோம் எம் இனிய அங்கிளை!

**பேரப்பிள்ளைகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ***Grand Dad***

My grandfather was the most important person to me. He had a personality like no one else I've even known. His love for me was unconditional and my love for him was no different. Throughout his lifetime, my granddad made many sacrifices, all so that I could have the best possible future and he would do everything within his power to make sure of it. He was my everything. He cared for me a lot more than anyone else I can thing of.

He would call me every hour to check up on what I was doing and to see if I was alright. I feel more lonely than I have even felt right now. All of a sudden my life has become extremely quiet.

He is the person that I loved the most and I won't let him down. My love for him will never change and he will never be forgotten.

***Anojith***

***(Grandson)***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நினைவுத் துளிகள் (முக நூலில் இருந்து)

என் அன்புள்ள சித்தப்பா
அன்பு நிறைந்த உன் சிரிப்பால்
அனைவரையும் அரவணைத்து
அன்பினால் எம்மையெல்லாம்
இன்பத்தில் திளைக்க வைத்தாய்
துன்பம், துயர் துடிப்புடன் நின்றவேளை
அப்பா போல் எல்லா உதவியும் செய்து
பாசத்தில் எம்மை எல்லாம் நனையவைத்து
பலகதைகள் சொல்லி எம்மை மகிழ வைத்து
அன்பு மொழியால் எம்மை அரவணைத்து
இன்று துன்பத்தில் மூழ்க விட்டதேன்
கண்கள் பல உன்னைத் தேட
கண்களெல்லாம் கடலாய் பொங்க
கலங்க விட்டு எங்கு சென்றாய்
எண்ணி யெண்ணியே நாம் ஓங்கித் தவிக்கின்றோம்
உம் பாதத்திற்கு நிலையம் சாற்றக் கண்ணீரை
காணிக்கையாக்குகின்றோம்.

பெறாமகள்
*மீனா அம்பிகாபதி*

**பிறக்கும் போது தாயை அழவைக்கின்றோம்**
**இறக்கும் போது எல்லோரையும் அழ வைக்கின்றோம்**
**வாழும் போதாவதுஎல்லோரிடமும் சிரிக்கப் பழகுவோம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உறவினர் உள்ளத்திலிருந்து...

சித்தப்பா, சித்தப்பா என கலங்குகின்றோம் எங்களை தங்கள் மக்களாக நினைத்து நல்ல ஆலோசனை கூறி, நல்லவழியை காட்டி, தேவை வரும்போதெல்லாம் கைகொடுத்து உதவினீர்கள். உங்கள் உடல் அக்கினியில் சங்கமமாயிற்று. ஆத்மா ஆண்டவனோடு ஐக்கியமாயிற்று. ஆனால் நீங்கள் என்றும் எங்கள் உள்ளத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள். உங்கள் ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்திக்கும்

பெறா மக்கள்

### ஒரு பிரார்த்தனை

எங்கு வேதனை உண்டோ அங்கு ஆறுதல் அளிக்கவும்.

எங்கு வெறுப்புண்டோ அங்கு அன்பு காட்டவும்

எங்கு கலக்கமுண்டோ அங்கு நம்பிக்கையூட்டவும்

எங்கு அந்தகாரம் உண்டோ அங்கு ஒளி வீசவும்

எங்கு துயரம் உண்டோ அங்கு மகிழ்ச்சி அளிக்கவும்

என்னை உமது கருவியாக பயன்படுத்தும் இறைவா!

மற்றவர்களால் நான் ஆறுதல் பெறாவிட்டாலும் நான்

மற்றவர்களுக்கு ஆறுதல் கொடுக்கவும்

மற்றவர்கள் என்னில் அன்புகூராவிட்டாலும்

நான் மற்றவர்கள் மீது அன்பு காட்டவும்

மற்றவர்கள் என்னைப் புரிந்து கொள்ளாவிட்டாலும் நான் மற்றவர்களைப் புரிந்து கொள்ளவும்

உமது வரம் தாரும் இறைவா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

அன்னை மடியில்
25.
04.
1944.



இறைவனடியில்
22.
02.
2017.

## அமரர் திரு நாகேந்திரா தவராசா

ஆறாத துயரமிது தீராத துன்பமிது
"அங்கிள்" "அங்கிள்" என்று அன்புடன் அழைத்தோமே
உங்கள் பாசத்தை கண்டோமே
இன்று உங்கள் பாசம் எங்கே மறைவானது?

வெந்துமனம் வெதும்பிட எம்மைவிட்டு எங்கு சென்றீர்?
எண்ணி எண்ணி நாம் கலங்க எம்மைவிட்டு சென்றீர்?
இத்தரையில் உங்களை நாம் இழந்து தவிக்கின்றோம்
உங்களைப் போல் ஒருவரை எப்பிறப்பில் நாம் காண்போம்

எங்கள் தேவையின் நிமித்தம் அழைத்தால்
அன்புடனே பதில் அளிப்பீர் செயலதனை முடித்திடுவீர்
ஆதரவாய் உடனிருந்து எமக்கு உதவி செய்திடுவீர்
எங்கு சென்றீர் எமை விடுத்து

ஒரு முறை அல்ல பலமுறை அழைக்கும் எங்கள் தொலைபேசி
பதில் அளிக்காவிட்டாலும் மனம் கோணமாட்டீர்கள்
மீண்டும் மீண்டும் எல்லோரையும் அழைப்பீர்கள்
பதில் அளித்து விட்டால் சந்தோஷம் அடைவீர்கள்

நிமிர்ந்த நடை நேர்கொண்ட பார்வை
எவரையும் அன்புடன் அரவணைக்கும் பாங்கு
யாவற்றையும் தன்னகத்தே கொண்ட
தங்களுக்கு வந்த கொடிய நோய் தான் என்ன?

காலனும் நோக்க நீங்களும் சிரித்தீர்கள்
எங்களுக்கு விளங்கவில்லை உங்கள் சிரிப்பின் அர்த்தம்
மிஞ்சியது அழுகையும், கண்ணீரும் தான்
இனி யாருளர் எம்மை அரவணைக்க?

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்
தம்பி குடும்பத்தினர் (திரு திருமதி தேவராசா, டிலக்ஷன்)

JR Print Tel: 0208 503 6643



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



**மலர்வு**

25
.
07
.
1944

**உதிர்வு**

22
.
02
.
2017

## அமரர் . நாகேந்திரர் தவராசா

**காலத்தின் கோலமிது
காலன் அவன் வேலையிது
மாநிலத்தில் நலமுடனே
வாழ்ந்தவரே எங்கு சென்றீர்கள்.**

**பண்பின் உறைவிடமாய்
பாசத்தின் புகலிடமாய்
பார் போற்றும் மனிதனாய்
அன்புமிகு உத்தமராய் வாழ்ந்தீர்கள்**

**வேதனையில் அனைவரையும்
வெம்பித் தவிக்க விட்டு
போகும் வழி கூறிவிடாமல்
போன இடம் தேடுகிறோம்**

**உற்றவரும் ஊரவரும் உமைப்பிரிந்து வாடுகின்றோம்
கண்களிற் காட்சியாய் கதைகூறி நிற்க
கணப்பொழுதில், தம் கரம் எடுத்தாரோ கடவுள்
நினைத்துப் பார்க்கின்றோம் நெஞ்சம் ஒரு
கணமும் பொறுக்குதில்லையே;
ஓம் சாந்தி சாந்தி சாந்தி.**

**அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

**உங்களின் பிரிவால் துயருறும்
பரன் - மருமகன் மகள்- அச்சா (செல்வி) பேரப்பிள்ளைகள்- கார்த்திக் தர்சிகா
வேலாயுதபிள்ளை குடும்பம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

மீளாத்துயில்.....

என்பும் கனிந்திட பேசும்
அன்புடை எங்கள் மாமாவே!
எம்மை ஆறாத் துயரில் ஆழ்த்தி
மீளாத்துயில் கொண்டதேனோ?
சுற்றத்தை தழுவி நின்ற எங்கள்
சுந்தரரே எம்முளம் நிறைந்தவரே
நின்னைத் தன் துணையென
கைத்தலம் பற்றிய அத்தையை
நித்தமும் நினைத்தழ வைத்து
நீண்ட துயில் கொண்டதேனோ?
அக்கா, அத்தான் என்று நீங்கள்
அன்பது கனிய அன்று அழைத்தது
நித்தம் நிழலாகத் தொடர்கிறது.
அண்மையில் சந்தித்தபோது
உடலோடு உள்ளம் கலந்தது
உள் நின்ற பாசம் தெரிந்தது
இளமைக்கால நினைவுகள் தம்மை மீட்டுப் பார்க்கிறேன்.
சிங்களவர் செறிந்திட்ட தேசத்தில்
சீர்கொண்ட வர்த்தகர் நீங்கள் - எம்
திருநாள் தைப்பொங்கல் தன்னில்
வெடி கொண்டு வருவீர் தருவீர் - என்று
வாசலில் காத்து நிற்கும்
சின்னஞ்சிறு மழலைகள் கூட்டத்தில் - நான்
நின்னைக் கடவுளாய் அன்றே பார்த்தவன் - இன்று
இந்நிலம் விட்டு இறையோடு கலந்ததால்
உறவுகள் தம்மோடு துயரது பகிர்ந்து
இறைவன் என்றே ஏத்தித் தொழுது
ஆத்மா சாந்திக்காக வேண்டுகின்றேன்.

பாரிசிலிருந்து
மருமகன்
செல்லையா தேவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



அன்னை மடியில்
25-07-1944

ஆண்டவன் இணைப்பில்
22-02-2017

## அமரர் நாகேந்திரர் தவராசா

சரவணை கிழக்கு வேலணை (பள்ளம்புலம்)

நேற்று வரை இருந்து
அமுத மழை பொழிந்து
ஆரத் தழுவிய உள்ளம்
எமையெல்லாம் தவிக்கவிட்டு
பாசத்தை தன் இதயத்தில்
தேக்கியவாறே இறுதிப் பயணத்தை
தொடர்ந்ததால் பரிதவிக்கின்றோம்.
நிமிர்ந்த நன் நடையும்
நெட்ட நெடு உருவும்
நேர் கொண்ட பார்வையும்
பண்புடை சொல் நயமும்
பாங்குடை நல் மனமும்
இல்லை என்று வந்தோர்க்கு
இல்லையென்று சொல்லாத மாண்பும்
வந்தோரை வரவேற்று உபசரித்து
விருந்தோம்பி மகிழ்வுறு பண்பும்
நெஞ்சில் வஞ்சமிலா நினைவும்
குழந்தை மனமும்-என்றும்
குன்றா இளமையும்
நவில் தொறும் வார்த்தையில்
இன் சொல்ப் பனுவலும்
இனி எப்போ கேட்பது-எம்
இனிய உறவின் பிரிவோடு
ஏக்கமே மீதி யென்றானது
குடும்பத்தில் இளையவனானாலும்
மூத்தவராய் முன்னின்று-தினம்
தன் குடும்ப உயர்வுக்காய்
தென் இலங்கையில் எல்ப்பிற்றியில்
அண்ணன் நாகநாதபிள்ளை வழித்தடம்
நாதன் ஸ்றோர் அதனில்
வாணிபம் செய்து வளமது சேர்த்து
மனங்களை நிறைத்து மகிழ்வது கண்டவர்
தாயாய் தந்தையாய் சோதரராய்
தக்கதோர் துணையாய் நின்றவர்
இன்று இவ்விடம் இல்லை-ஏனோ?
இறைவன் வேகமாய் அழைத்தான்
தன் துணையென இருந்தவர்
தன்னை தனிமையில் விட்டு
சென்றாரே என்று-நிதம்
சொல்லணாத் துயரதில் மூழ்கி
சொற்கள் மறுத்திட- உள்ளம்
நெக்குருக நினைந்தழும்
துணைவியார் தமக்கும்
நேரில் பங்கு கொள்ள முடியாமல்
தவித்திடும் உடன் பிறந்தோர் தமக்கும்-மற்றும்
உற்றார்; உறவினர்; நண்பர்கள், தமக்கும்
ஆறுதல் தமைக் கூறி
துயரதில் பங்கு கொண்டு
ஆத்ம சாந்திக்காய்
இறைதாள் இறைஞ்சுகின்றோம்.

துயரில்! கலக்கும்
உறவினர் நண்பர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முருகனின் பெயர்களும் பொருள்களும்

| | | |
|---|---|---|
| முருகன் | - | அழகுடையவன் |
| குமரன் | - | இறைவனாய் எழுந்தருளியிருப்பவன் |
| குகன் | - | அன்பர்களின் இதயமாகிய குகையில் எழுந்தருளியிருப்பவன் |
| காங்கேயன் | - | கங்கையால் தாங்கப்பட்டவன் |
| சரவணபவன் | - | சரவணப் பொய்கையில் உதித்தவன் |
| சேனாபதி | - | சேனைகளின் தலைவன் |
| சுவாமிநாதன் | - | தந்தைக்கு உபதேசித்தவன் |
| வேலன் | - | வேலினை ஏந்தியவன் |
| கந்தன் | - | ஒன்று சேர்க்கப்பட்டவன் |
| கார்திகேயன் | - | கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப்பட்டவன் |
| சண்முகன் | - | ஆறுமுகங்களையுடையவன். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கோயிலில் செய்யத்தகாதவைகள்

- ஆடையால் உடம்பை மூடிக்கொண்டு இறைவனை வணங்குதல். இதனால் மூன்று பிறப்பில் ஊமையாகவும், பின் ஏழு பிறப்புகளில் தரித்திரனாகவும் வாழ்வான் என நூல்கள் கூறுகின்றன.
- ஆசாரமில்லாது நடமாடுதல், விபூதி மற்றும் பிரசாதங்களை கீழே சிந்துதல்
- ஒரே முறை பிரகாரத்தில் வலம் வருதல்
- எச்சில் உமிழ்தல், மலசலம் கழித்தல்
- நித்திரை செய்தல், கால்களை நீட்டிக்கொண்டிருத்தல்
- மயிர் கோதி முடிதல், சூதாடுதல்
- பாதரட்சை இட்டுக் கொள்ளுதல்
- வீண்வார்த்தை பேசுதல், பொய் பேசுதல் இரைந்து சிரித்தல்
- பிறரைத் துன்புறுத்தல், விளையாடுதல்
- சுவாமிக்கும் பலிபீடத்திற்குமிடையே வணங்குதல்
- அபிஷேக காலத்திலும், நிவேதன காலத்திலும் வணங்குதல், வலம் வருதல்
- திருவிளக்கு அணையக் கண்டும் தூண்டாதிருத்தல்
- காம எண்ணங் கொள்ளல்
- கம்பளி ஆடை அணிதல்
- இறைவனுக்கு நிவேதியாததை உண்ணுதல், தாம்பூலம் போடுதல், புகைத்தல்
- விக்கிரகத்தைத் தொடுதல்
- தூபி, துவஜஸ்தம்பம்(கொடிமரம்), பலிபீடம், இடபம், விக்கிரகம், முதலியவற்றின் நிழலை மிதித்தல்
- உற்சவம் கொண்டருளும் போது அவ்விடத்தை விட்டு உள்ளே போய் வணங்குதல்
- வழிபடுவோருக்கு இடையூறு கொடுக்கும் வகையில் நடந்து கொள்ளல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீதிநூல் - ஆத்திசூடி

காப்பு

**ஆத்திசூடி யமர்ந்த தேவனை**
**ஏத்தி யேத்தித் தொழுவோம் யாமே**

சிவபெருமானின் அன்புமிக்க பிள்ளையாகிய விநாயகரை நாம் எப்பொழுதும் வழிபட்டு வணங்குவோமாக.

**1. அறஞ்செய விரும்பு**
நல்வாழ்வு நடத்துவதற்கு ஆசை கொள்ள வேண்டும்
**2. ஆறுவது சினம்**
தணிய வேண்டுவது கோபமாகும்
**3. இயல்வது கரவேல்**
நம்மால் முடிந்ததை ஒளியாமல் செய்ய வேண்டும்
**4. ஈவது விளக்கேல்**
பிறருக்குக் கொடுப்பதைத் தடுக்கலாகாது
**5. உடையது விளம்பேல்**
நம் திறமைகளை வெளியே சொல்லக்கூடாது
**6. ஊக்கமது கைவிடேல்**
ஒரு காரியம் செய்யும்போது தடை ஏற்படுமானால் அது கண்டு உற்சாகம் குன்றிவிடலாகாது.
**7. எண் எழுத்து இகழேல்**
கணிதம், இலக்கியம் இவற்றை இகழ்ந்து பேசுதல் ஆகாது.
**8. ஏற்பது இகழ்ச்சி**
யாசிப்பது இழிவு தருவதாகும்
**9. ஐயம்இட்டு உண்**
பிச்சையிட்டுப் பின்னர் உண்ணுதல் வேண்டும்
**10. ஒப்புரவு ஒழுகு**
உலகத்தின் போக்கு எப்படி என அறிந்து அதன்படி நடந்து கொள்ள வேண்டும்.
**11. ஓதுவது ஒழியேல்**
எக்காரணத்தை முன்னிட்டும் படிப்பதை விடலாகாது
**12. ஔவியம் பேசேல்**
பொறாமை கொண்டு பேசுவது கூடாது.
**13. அஃகஞ் சுருக்கேல்**
அளவைக் குறைத்துத் தானிய வியாபாரம் செய்தலாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொன்றை வேந்தன்

**கொன்றை வேந்தன் செல்வ னடியிணை என்று மேத்தித் தொழுவோம் யாமே**

கொன்றை மாலை சூடிய சிவபெருமானின் செல்வனாகிய விநாயகக் கடவுளை எப்போதும் நினைவில் கொள்வோமாக.

**1. அன்னையும் பிதாவும் முன்னெறி தெய்வம்**
தாயும் தந்தையும் கண்கண்ட தெய்வம்.

**2. ஆலயம் தொழுவது சாலவும் நன்று**
கோவிலுக்குப் போய் கடவுளை வணங்குவது மிக நல்லது.

**3. இல்அறம் அல்லது நல்அறம் அன்று**
மனையாளுடன் கூடிச் செய்யும் இல்லறமே நல்லறம். மற்ற வாழ்வு நல்லறமன்று.

**4 ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்**
வறியோர்க்குக் கொடாதவரின் செல்வத்தை தீயவர்கள் கொண்டு செல்வார்கள்.

**5. உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கு அழகு**
குறைவாகச் சாப்பிடுதல் பெண்களுக்கு அழகைத் தரும்.

**6. ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்**
தனது ஊராருடன் ஒருவன் பகைத்துக் கொண்டால் அவன் பூண்டோடு நாசமாவான்.

**7. எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்**
கணிதமும் இலக்கணமும் மனிதரின் கண்கள் போன்றவை.

**8. ஏவா மக்கள் மூவா மருந்து**
குறிப்பறிந்து செயலாற்றும் பிள்ளைகள் தேவாமிர்தம் போன்றவர்கள்.

**9. ஐயம் புகினும் செய்வன செய்**
பிச்சை எடுத்தாலும் நல்ல காரியங்களைச் செய்வது நல்லது.

**10. ஒருவனைப்பற்றி ஓரகத்திரு**
ஒரே கணவனை மணந்து ஒரு வீட்டில் வசிக்க வேண்டும்.

**11. ஓதலின் நன்றே வேதியர்க்கு ஒழுக்கம்**
வேதம் ஓதுவதை விடப் பிராமணர்க்கு மிகச் சிறந்த ஒழுக்கம் எதுவும் இல்லை.

**12. ஒளவியம் பேசுதல் ஆக்கத்திற்கு அழிவு**
பொறாமை வார்த்தை கூறுவது வளர்ச்சிக்குத் தீங்கு தரும்

**13. அஃகமும் காசும் சிக்கனத் தேடு**
வீண் செலவு செய்யாமல் தானியத்தையும் பொருளையும் தேட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனித உடல் பற்றிய தகவல்கள்

1. மனிதனின் சராசரி நாடித்துடிப்பு – நிமிடத்திற்கு 72 தடவைகள்
2. சராசரி வெப்பநிலை – 98.40F, 36.80C
3. மிக நீண்ட எலும்பு – தொடை எலும்பு
4. மிகச்சிறிய எலும்பு – காதிலுள்ள எலும்பு (3mm)
5. எலும்புகள் அதிகம் உள்ள பகுதி – கைகள்
6. எலும்புகளின் மொத்த எண்ணிக்கை – 206
7. உயிரற்ற கலங்களால் ஆக்கப்பட்ட பகுதி – நகம், மயிர்
8. முதலில் இறக்கும் பகுதி - மூளையின் கலங்கள்
9. உயிரணுவில் உள்ள நிறமூர்த்தங்கள் - 23 கோடி
10. குருதி வகைகள் - A, B, AB, O
    பொது வாங்கி - AB
    பொது வழங்கி - O
11. நாக்கில் உள்ள சுவை அரும்புகள் - 1000
12. மிக வலிமையான தசைப்பகுதி – நாக்கு
13. மிகப்பெரிய தசை - இதயத்தசை
14. பிறப்பிற்குப் பின் வளர்ச்சியடையாத பகுதி – கருவிழிப்படலம்
15. முதலில் உறங்கும் உறுப்பு – கண்கள்
16. மனித உடலின் எலும்புகளின் எடை -13%
17. கண்களால் பிரித்தறியக்கூடய நிறங்களின் எண்ணிக்கை- 17000
18. மிகத்தூய்மையான இரத்தமுள்ள பகுதி – சிறுநீரகச் சிற்றறைகள்
19. மூளையின் இயக்கும் நரம்புகள் - 12 கோடி
20. முள்ளந்தண்டில் உள்ள எலும்புகள் - 33
21. ஒரு நாளில் இதயத்துடிப்புக்களின் எண்ணிக்கை -103689
22. உடலில் வியர்க்காத பகுதி – உதடு
23. ஒரு நிமிடத்துக்கு பேசக்கூடிய சொற்கள் - 150
24. உடலின் மென்மையான சருமம் - கண் இமை
25. ஒரு நாளில் சராசரி உதிரும் தலைமுடிகள் - 40-100வரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

அணைந்தும் அணையா விளக்காய், அன்பு, பண்பு, பாசம் ஆகிய முக்கோணங்களிலும் சிறந்து வாழ்ந்து நல்வழி காட்டிய எங்கள் குடும்பத்தலைவர் அமரர் திரு.நாகேந்திரர் தவராசா அவர்கள் நோயுற்றபோது வீட்டிலும், மருத்துவமனையிலும் வந்து ஆறுதல் அளித்தவர்களுக்கும், அன்னார் இறைவன் திருவடியை அடைந்தபோது எங்கள் இல்லம் நாடி வந்து அனுதாபம் அளித்தவர்களுக்கும், மரணச்சடங்கில் கலந்து கொண்டு இறுதி மரியாதை செலுத்தியவர்களுக்கும், தொலைபேசி மூலம் ஆறுதல் வார்த்தை கூறி எங்கள் துன்பத்தைப் பகிர்ந்து கொண்டவர்களுக்கும், அன்னாரின் அந்தியேட்டி, சபீண்டீகரண நிகழ்வுகளை நடாத்திய அந்தணர்களுக்கும் அவற்றில் பங்கு கொண்டு ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்தனை செய்த நல்ல உள்ளங்களுக்கும் இன்றுவரை எமக்கு பல்வேறு உதவிகள் செய்து வரும் நண்பர்கள், உற்றார், உறவினர் அனைவருக்கும் இம்மலரினைன எமக்கு அழகுற பதித்துத் தந்த J.R Print நிறுவனத்தினருக்கும் எமது உணர்வு பூர்வமான நன்றிகளையும், வணக்கங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இங்ஙனம்
மனைவி, பேரன்
உறவினர்

230, Streatfield Road
Harrow HA3 9BX

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது,
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது,
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்,
உன்னுடையதை எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய், அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருந்தாய், அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள், அது வேறொருவருடையதாகும்
இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாரம்சமுமாகும்

**பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்**



Designed & Printed @ JR Print
Tel: 020 8503 6643

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org